1995 நவம்பர் 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 11, திரு. வெ. பாலசுப்பிரமணியன், மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்.

இந்தக் கேள்வியில் ஒரு சிறு வார்த்தை விடப்பட்டு இருக்கிறது. 'வசிப்பதற்கு தகுதியற்ற குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளை' என்பதற்குப் பிறகு 'மாற்றி' என்று ஒரு வார்த்தை விடப்பட்டு இருக்கிறது. அதைச் சேர்த்துக் கொள்ளவும். 'குடியிருப்புகளை மாற்றிப் புதிதாக கட்டித் தரப்படுமா?' என்று இருக்கவேண்டும்.

11—

குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் கட்டுதல்

**80162—திரு. வெ. பாலசுப்பிரமணியன்:*

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வசிப்பதற்குத் தகுதியற்ற குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளை மாற்றி புதிதாகக் கட்டித் தரப்படுமா?

(ஆ) பழுதடைந்த குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகள் விரைவில் பழுது பார்க்கப்படுமா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): மிகவும் பழுதடைந்த, மக்கள் வசிப்பதற்கு பாதுகாப்பற்ற குடிசை மாற்று வாரிய வீடுகளை மட்டும், பயனாளிகள் தவணை முறை திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தவுடன், புதிதாக கட்டித் தரப்படும். அதைப்போலவே, பயனாளிகளிடமிருந்து தவணைமுறை திட்டத்திற்கு ஒப்புதல் பெற்றவுடன், குடிசை மாற்று வாரிய வீடுகளை பழுதுபார்க்கும் பணியும் செய்யப்படும்.

திரு. வெ. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவையின் மூலமாக குடிசை மாற்று வாரியக் கட்டிடங்களை பழுது பார்ப்பது சம்பந்தமாக வெளியிட்டுள்ள அறிவிப்பிற்கு நன்றியைத் தெரிவித்துக்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கொள்கிறேன். தற்போது பல பகுதிகளில் இந்த மாதிரி தவணை முறை திட்டத்திற்கு ஒப்புதல் தந்ததன் காரணமாக, என்னுடைய தொகுதியில் இன்றைக்கு பல இடங்களில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பெரும் அளவிலே நிதி ஒதுக்கி பழுது பார்க்கும் பணி மிக வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்தப் பழுது பார்க்கும் பணிகள் மிக வேகமாக நடப்பதற்கு நிதி உதவி தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் அந்தப் பணியைச் செய்வதற்கு திட்டமிட்டு மிக வேகமாக அதைச் செய்து தந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், என்னுடைய தொகுதியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஜீனத் சர்புதீன்.

திருமதி ஜீனத் சர்புதீன்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான சேப்பாக்கத்தில், சிந்தாதிரிப் பேட்டையில் உள்ள, நமது நிதி அமைச்சர் அவர்களின் பெயரில் அமைந்துள்ள குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக கட்டப்பட்ட வீடுகள் மிகவும் பழுதடைந்த நிலையில் இருந்தன. அதனை, குடிசை மாற்று வாரியத் தலைவர் அவர்கள் வந்து பார்வையிட்டு, இப்போது நல்லமுறையில் பழுதுபார்க்கும் வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அதற்காக முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல், சேப்பாக்கம் கெஸ்ட் ஹவுசுக்குப் பக்கத்தில் உள்ள வீடுகளும் அதுவும் நமது நிதியமைச்சர் அவர்கள் பெயரில்தான் அந்த குடிசை மாற்று வாரிய வீடுகளும் உள்ளன. அதையும் பழுது பார்த்துத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன. அப்படிச் செய்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது. ஆனாலும் அதைச் செய்து தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சே. ரகுபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிசை மாற்று வாரியத்தினுடைய வீடுகளை பழுது பார்ப்பதற்காக ஹட்கோ நிறுவனத்திடமிருந்து 411 லட்சம் ரூபாய் கடனாகக் கேட்கப்பட்டு அதற்கான அனுமதியும் பெறப்பட்டு இருக்கிறது. எனவே, குடிசை மாற்று வாரியத்தினுடைய வீடுகளிலே வாடகைக்காக இருக்கின்ற பயனாளிகள் அல்லது அங்கே இருக்கின்றவர்கள் தவணைமுறைத் திட்டத்திற்கு ஒப்புதல் தந்தவுடன், யார் யார் எல்லாம் ஒப்புதல் தந்திருக்கிறார்களோ, அந்த வீடுகளினுடைய பழுது பார்க்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பகுதியிலே இருக்கின்ற அந்தக் குடிசை மாற்று

1995 நவம்பர் 3]

வாரியக் குடியிருப்புகளில் இருக்கின்ற பயனாளிகள் தவணை முறைத் திட்டத்திற்கு ஒப்புதல் தந்தவுடன் அங்கேயும் பணிகள் துவங்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 12, திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

12—

தமிழகத்தில் கரும்பு விலையை நிர்ணயித்தல்

61824—திரு. ஆர். சிங்காரம்:

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் கரும்பு விலை டன் ஒன்றுக்கு ரூ.800/-விலை நிர்ணயிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கரும்புக்கு குறைந்தபட்ச அடிப்படை விலையை நிர்ணயம் செய்வது மத்திய அரசின் பொறுப்பாகும். எனவே, டன் ஒன்றுக்கு 800 ரூபாய் குறைந்தபட்ச அடிப்படை விலையை மத்திய அரசு அறிவிக்குமானால், அதைத் தமிழக அரசு மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டு, கரும்பு பயிரிடும் விவசாயிகளுக்கு ஆதரவு அளிக்கும்.

முற்பகல் 10-50

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் முதலமைச்சராக டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி ஏற்ற பிறகு, அவர்கள் ஆட்சிக்கு வந்தபோது, சுமார் 250 ரூபாய் ஒரு டன்னுக்கு இருந்த விலை சென்ற ஆண்டு மட்டும் திடீரென்று ஸ்பெசல் பிரைசாக 106 ரூபாயை கூடுதலாக்கி இந்த அரசு நிர்ணயித்து உத்தரவிட்டது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள். அப்படிக் கரும்பு விவசாயிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து கொண்டிருக்கிற இந்த அரசு தற்போது கரும்பு விவசாயிகள், விலைவாசி ஏறிவிட்ட காரணத்தாலும், வெட்டுக்கூலி ஒரு டன்னுக்கு சுமார் 200 ரூபாய் என்று ஆகிவிட்ட காரணத்தாலும், லிப்டிங் லேபர் ஒரு டன்னுக்கு 3 பேர் என்ற படி 75 ரூபாய் ஆகிறது என்றும், மாமூல் ரூபாய்